| Article Date | Headline / Summary | Publication |
| --- | --- | --- |
| 11 Aug 2024 | Approaching rainy season... insurance to cover losses! | Nanayam Vikatan |

விபத்துக் காப்பீடு

# நெருங்கும் மழைக்காலம்... இழப்புகளைச் சமாளிக்க எடுக்க வேண்டிய காப்பீடுகள்!

மழைக்காலம் குளிர்ச்சியான வானிலையையும், பசுமையான சூழலையும் உருவாக்கித் தருவதோடு மட்டுமல்ல, கூடவே சில ஆபத்துகளையும் கொண்டு வருகிறது. குறிப்பாக, அடிக்கடி பயணம் செய்பவர்கள் பல வகையிலும் கஷ்டப்படுகிறார்கள்.

தனிநபர் விபத்துக் காப்பீட்டு பாலிசி அளிக்கும் முக்கியமான சில நன்மைகள் இனி...

**விபத்துகளுக்கான நிதி இழப்பீடு...**

இந்தக் காப்பீட்டு பாலிசி, விபத்து தொடர்பான பல்வேறு சூழ்நிலைகளுக்கு நிதி சார்ந்த இழப்பீடுகளை வழங்குகிறது. விபத்தால் இறப்பு ஏற்பட்டால், பாலிசிதாரரின் நாமினிக்கு பாலிசியின் கவரேஜ் தொகையைப் பொறுத்து மொத்தத் தொகை இழப்பீடாக வழங்குகிறது.

விபத்தில் பாலிசிதாரருக்கு எந்தச் செயலையும் செய்ய முடியாத அளவுக்கு மொத்த ஊனம் ஏற்பட்டால் அதற்கான நிதி உதவியை வழங்குகிறது. நிலையான வருமானம் இல்லாத சூழலில் இந்தக் காப்பீட்டை வைத்து குறிப்பிட்ட காலத்துக்கு நிதி உதவி பெறலாம்.

**தினமும் கார், பைக் அல்லது பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்பவர்களுக்கு மழைக்காலத்தில் விபத்து ஏற்படுவதற்கான அபாயங்கள் அதிகமாக இருக்கின்றன.**

விபத்தில் பகுதி அளவு ஊனம் ஏற்பட்டால் அதனால் உண்டான இயலாமை அளவுக்கேற்ப இழப்பீட்டுத் தொகை தரப்படும். விபத்துக் காரணமாக பாலிசிதாரரால் தற்காலிகமாக வேலை செய்ய முடியாமல் போனால், வாராந்தர அடிப்படையிலான இழப்பீட்டுத் தொகை தரப்படும். இதன் மூலம் இழந்த வருமானத்தை ஓரளவுக்கு ஈடுகட்டலாம்.

**மருத்துவச் செலவுகளுக்கான கவரேஜ்...**

விபத்துக்கள் ஏற்படும்போது சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்வதில் தொடங்கி, அறுவைசிகிச்சை மற்றும் மறுவாழ்வு உள்ளிட்ட மருத்துவத் தேவைகளுக்குக் கணிசமான பணச் செல்வுகள் ஆகின்றன.

தனிநபர் விபத்துக் காப்பீடானது பொதுவாக, இத்தகைய மருத்துவச் செலவுகளுக்கான கவரேஜை உள்ளடக்கி, நிதிச் சிரமமின்றித் தேவையான மருத்துவ சிகிச்சையைச் சரியான நேரத்தில் பெறுவதை உறுதி செய்கிறது.

**காப்பீட்டின் கூடுதல் நன்மைகள்...**

சில தனிநபர் விபத்துக் காப்பீட்டுத் திட்டங்களில் கூடுதல் மருத்துவச் செலவுகளுக்கான இழப்பீட்டு அம்சங்களும் வழங்கப்படுகின்றன.

**பாஸ்கர் நெருர்கர்,**
தலைவர் - மருத்துவம் மற்றும் பயணக் காப்பீடு நிர்வாகக் குழு,
பஜாஜ் அலையன்ஸ் ஜெனரல் இன்ஷுரன்ஸ்





அவசர காலத்தில் மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் செல்வதற்கான செலவுகளை ஈடுகட்டுகிறது. பாலிசிதாரர் விபத்துக் காரணமாக மரணம் அல்லது ஊனமுற்றால் பாலிசிதாரரின் குழந்தைகளின் கல்விச் செலவுகளுக்கான நிதி உதவியை வழங்குகிறது. பாலிசிதாரர் விபத்தில் இறக்க நேரிட்டால் இறுதிச் சடங்குக்கான செலவுகளுக்கும் காப்பீட்டில் இழப்பீடு வழங்கப்படுகிறது.

மழைக்காலங்களில் தனிநபர் விபத்துக் காப்பீடு ஏன் அவசியம் எனப் பார்ப்போம்.

**சாலை விபத்துகளுக்கான சாத்தியங்கள் அதிகம்...**

முன்பே சொன்னது போல, மழைக்காலத்தில் சாலைகள் வழுக்கக்கூடியவையாக இருக்கின்றன. மேலும், நீர் தேங்கி சாலையை மறைத்தல், சாலைகளில் பள்ளங்கள் ஏற்படுதல் உள்ளிட்ட பல காரணங்களால் விபத்துகள் அதிகரிக்கும் வாய்ப்புகள் இருக்கின்றன.

இது போன்ற துரதிர்ஷ்டவசமான நிகழ்வுகள் ஏதேனும் ஏற்பட்டால் அதனால் ஏற்படக்கூடிய மருத்துவச் செலவுகளை சமாளிக்கவும், நிதி ரீதியாக சுமைக்கு ஆளாகாமல் இருக்கவும் தனிநபர் விபத்துக் காப்பீடு உதவுகிறது.

**தினசரி பயணிகளுக்கு உள்ள ஆபத்துகள்...**

தினமும் கார், பைக் அல்லது பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்பவர்களுக்கு மழைக்காலத்தில் விபத்து ஏற்படுவதற்கான அபாயங்கள் அதிகமாக இருக்கின்றன. ஒரு தனிநபர் விபத்துக் காப்பீடு இந்த ஆபத்துகளுக்கு நிதி சார்ந்த பாதுகாப்பை வழங்குகிறது. கூடவே, நம்பிக்கையையும் மன அமைதியையும் வழங்குகிறது.

மழைக்காலம் நெருங்குகிறது. உங்களுக்கு நிதிப் பாதுகாப்பைத் தரும் தனிநபர் விபத்துக் காப்பீடு உங்களிடம் உள்ளதா..?